வலிமிகும் இடங்களை அறிந்து சேர்த்தெழுதுக.

1 மருதன் காலை வேளையில் தன் தோட்டத்துக்கு+சென்றான். நிறைய பூச்செடிகளை நட்டான். செடிகளுக்கு+தண்ணீர் ஊற்றினான். நீண்ட நேரம் வேலை செய்ததால் அவனுக்கு+களைப்பாக இருந்தது. மரத்தடியில் அமர்ந்து ஓய்வெடுத்தான். மாலையில் வீட்டிற்கு+திரும்பினான்.

2 பள்ளிக்கு+போன தங்கை வீடு திரும்பினாள். மதிய உணவு உண்ட பின் தனது அறைக்கு+சென்றாள். வீட்டுப் பாடங்களை எடுத்தாள். கணித வினாக்களுக்கு+பதில் எழுதினாள். சிறிது நேரத்தில் அவளுக்கு+தாகம் எடுத்தது. அம்மாவிடம் பழச்சாறு கேட்டாள்.

3 மாலை நேரமானது. அலுவலகத்திற்கு+சென்ற தந்தை வீடு திரும்பினார். தந்தைக்கு+களைப்பாக இருப்பதாகக் கூறினார். பாட்டி அவருக்கு+சூடான தேநீர் தயாரித்துக் கொடுத்தார். எங்களுக்கு+பிடித்தமான உளுந்து வடையைச் செய்து கொடுத்தார்.

4 அம்மா சமையலுக்கு+ தேவையான காய் கறிகளைச் சந்தையில் வாங்கினார். அவருக்கு+துணையாக அண்ணனும் சென்றார். இருவரும் பொருள்களை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு+புறப்பட்டனர்.

சமையலுக்குத் தேவையான

அவளுக்குத் தாகம்

வினாக்களுக்குப் பதில்

எங்களுக்குப் பிடித்தமான

அவருக்குத் துணையாக

தந்தைக்குக் களைப்பாக

வீட்டிற்குப் புறப்பட்டனர்

அலுவலகத்திற்குச் சென்ற

அவருக்குச் சூடான

அறைக்குச் சென்றாள்

பள்ளிக்குப் போன

வீட்டிற்குத் திரும்பினான்

செடிகளுக்குத் தண்ணீர்

அவனுக்குக் களைப்பாக

தோட்டத்துக்குச் சென்றான்

LIVEWORKSHEETS